ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/19 - 2016 මාර්තු මස 02 වැනි බදාදා - 2016.03.02

*1956/19 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்)**

*மதுவரி அறிவித்தல் இல. 988*

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் கீழ் குறிப்பிடப்படும் விதிகளைப் பிரகடனப்படுத்துகிறேன்.*

*2014, ஒற்றோபர் 24 ஆந் திகதியிடப்பட்ட 1885/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 972 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, மாச்சு 02.*

**விதிகள்**

*1. இங்கு, அட்டவணை I இல் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருளின் மீது அதற்கு நேரொத்த வகையில் அதே அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அளவில் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மதுவரியொன்று விதிக்கப்படுகின்றது.*

*2. ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்ய விரும்புகின்ற ஆளொருவர், அவர் இங்கு, அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விண்ணப்பப்படிவம் ஒன்றினை மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.*

*3. விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில், அவரால் இங்கு அட்டவணை III இல் குறிப்பிடப்படும் படிவத்திற்கு அமைய, அங்கீகாரத்தினை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுறாத சந்தர்ப்பத்தில், அவ்விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்று ஐந்து நாட்களுக்குள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணத்தினை மதுவரி ஆணையாளர் நாயகம் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5. ஈதைல் மதுசாரம் சுங்கத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் இங்கு அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடிதத்தினை சுங்கப் பணிப்பாளர் நாயகம் சான்றளித்து, அவற்றினை விடுவிப்பதற்காக மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. மதுவரி தொடர்பான கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் ஈதைல் மதுசாரம் இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றினையும் அதில் இறக்குமதி செய்யப்பட்ட ஈதைல் மதுசாரத்தினை இடம் பெயர்வதற்கான அனுமதிப்பத்திரம் என்பவற்றினையும் இங்கு, அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான படிவத்திற்கு ஏற்ப வழங்குதல் வேண்டும்.

7. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட, இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தினை, அனுமதித்த எல்லைப் பிரதேசத்தில் மதுவரி உத்தியோகத்தர்களினால் சோதனை செய்வதற்கு வேண்டப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

*அட்டவணை I*

| | நிரல் I | நிரல் II | நிரல் III | |
|---|---|---|---|---|
| | பொருள் | மாதமொன்றிற்கு உள்நாட்டில் விடுவிக்கப்படுகின்ற/இறக்குமதி செய்யப்படுகின்ற லீற்றர் அளவு | தீர்வை வீதம் (தொகை லீற்றர் ஒன்றுக்கு) | |
| | | | உள்நாட்டு வழங்கல் | இறக்குமதி |
| 1. | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் அரச திணைக்களங்கள் என்பவற்றினால் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் | 10,000 லீற்றர் வரை | இலவசம் | இலவசம் |
| | | சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவிற்காக 20,000 லீற்றர் வரை | | |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூபா 600/- | ரூபா 700/- |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூபா 1,000/- | ரூபா 1,100/- |
| 2. | இறுதி உற்பத்தியானது மதுவரி செலுத்துவதற்கு உட்படாத, மருந்துப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளைப் பயன்படுத்துகின்ற ஈதைல் மதுசாரம் | 500 லீற்றர் வரை | இலவசம் | ரூபா 200/- |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | ரூபா 600/- | ரூபா 700/- |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூபா 700/- | ரூபா 800/- |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூபா 1,100/- | ரூபா 1,200/- |
| 3. | இறுதி உற்பத்தியானது மதுவரி செலுத்துவதற்கு உட்படாத, ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்துகின்ற இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை தழுவி சுத்தப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்ற ஈதை மதுசாரம் | 500 லீற்றர் வரை | இலவசம் | இலவசம் |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | ரூபா 600/- | ரூபா 700/- |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூபா 700/- | ரூபா 800/- |
| | | 20,000 லீற்றர்களுக்கு மேல் | ரூபா 1,100/- | ரூபா 1,200/- |
| 4. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் மதுசார வகைகள் (கைத்தொழில் மதுசாரம்/பலம் குறைந்த மதுசாரத்திற்காக) | ஒவ்வொரு லீற்றருக்காகவும் | ரூபா 400/- | ரூபா 1,100/- |
| 5. | மதுசார உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரத்திற்கான வரி | ஒவ்வொரு லீற்றருக்காகவும் | ரூபா 10/- | ரூபா 10/- |

## அட்டவணை II

### ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

*விண்ணப்பப்படிவ இல.:*

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. அடையாள அட்டை இல. :
3. தொலைபேசிஇல. :
4. மின்னஞ்சல் :
5. முகவரி :
   தனிப்பட்ட முகவரி :
   வியாபார முகவரி :
6. உரிமமளிக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் :
7. உரிமமளிக்கப்பட்ட பிரதேசத்தின் முகவரி :
8. ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வதற்காக உத்தேசிக்கப்படும் நாடு :
9. ஈதைல் மதுசாரத்தினை உற்பத்தி செய்த நாடு:
   (இத்துடன் பொருள் விபரப் பட்டியல் இணைக்கப்படுதல் வேண்டும்)
10. இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்ட ஈதைல் மதுசாரத்தின் லீற்றர் அளவு :
11. ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வதற்காக உத்தேசிக்கப்படும் திகதி :

.....................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ................

---

*அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்,*

நிபந்தனைகள் ஏதேனுமிருப்பின் ..........................................................................................................................................

இரத்துச் செய்யப்படுவதற்கான காரணம் : ..........................................................................................................................

ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வதற்காக அனுமதியினை வழங்குகிறேன்/அனுமதி வழங்கப்படவில்லை/மேற்குறித்த நிபந்தனைகளின் கீழ் அனுமதியினை வழங்குகிறேன்.

.....................................
கையொப்பமும் திகதியும்,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

---

## அட்டவணை III

*விண்ணப்பப்படிவ இல.:*
*மதுவரி தலைமை அலுவலகம்*

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர்,
இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் திணைக்களம்,
கொழும்பு.

### ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்தல்

................ (முகவரி) இல் வசிக்கும் ...................... தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் கொண்ட ................... (முழுப் பெயர்) என்பவருக்கு இங்கு கீழ் குறிப்பிடப்படும் ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வது தொடர்பில் அங்கீகாரத்தினை வழங்குமாறு வேண்டுகோள் விடுப்பதுடன், அவற்றினை இறக்குமதி செய்து இலங்கைக்கு கொண்டு வந்ததன் பின்னர சுங்கத் திணைக்களத்தினால் விடுவிப்புச் செய்வதற்கு முன்னர் ஈதைல் மதுசாரத்திற்கான இறக்குமதி மதுவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

பொருட் பட்டியல் இல :-
தொகை லீற்றர் அளவு :-
செல்லுபடியாகும் காலம் :-

மதுசரி ஆணையாளர் நாயகம்.

திகதி :-

## அட்டவணை IV

விண்ணப்பப்படிவ இல.:
மதுவரி தலைமை அலுவலகம்

மதுவரி ஆணையாளர் நாயகம்,
மதுவரி தலைமை அலுவலகம்,
கொழும்பு.

### ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரின் இல. ................ இனைக் கொண்ட உரிமப்பத்திரத்தின் கீழ் ................ இல் வசிக்கும் ......................... தேசிய அடையாள அட்டையினைக் கொண்ட ................... (முழுப் பெயர்) என்பவரால் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ஈதைல் மதுசாரத்தின் அளவு ............. (லீற்றர்) இனை விடுவிப்புச் செய்வதற்கு ஆயத்தமாகவுள்ளோம் எனவும் அதற்காக அங்கீகாரத்தினை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

கொள்கலன் இல. :-
அளவு (தொகை லீற்றர்களில்)

வேறு ஏதேனும் குறிப்புக்கள் :

அதிகாரமளிக்கப்பட்ட
சுங்க அலுவலரின் கையொப்பம்.

உரிமத்தின் இல.:

திகதி :-

## அட்டவணை V

### ஈதைல் மதுசாரத்தினை இறக்குமதி செய்வதற்கான உரிமப் பத்திரம்

விண்ணப்பப்படிவ இல. : ..........

1. விண்ணப்பதாரரது பெயர்/தாபனம் :
2. அடையாள அட்டை இல. :
3. முகவரி :
   தனிப்பட்ட முகவரி :
   வியாபார முகவரி :
4. தொலைபேசி இல. :
5. மின்னஞ்சல் :
6. உரிமத்தினைப் பெறுவதற்கான நோக்கம் :
7. இறக்குமதி செய்யப்படவுள்ள பொருட்களின் விபரம் :

| **கொள்கலன் இல.** | **ஈதைல் மதுசாரத்தின் லீற்றர் அளவு** | **செறிவு** | **முழுமையான லீற்றர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. வழிப்பாதை :
9. ஈதைல் மதுசாரத்தினை எடுத்துச் செல்லப்படும் இடத்தின் பெயரும் முகவரியும் :
10. கால எல்லை :
11. வேறு ஏதேனும் குறிப்புக்கள் :
12. திகதி :

அதிகாரமளிக்கப்பட்ட மதுவரி உத்தியோகத்தர்.

3-462

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.